## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு முரணாக திறைசேரிக்கு திருப்பி அனுப்பிய ரூபா 1,519,552 தொகை திறைசேரி மானிய முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் நிதி உட்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டுமென |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் வசதிகளை செய்து கொடுப்பவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படாத ரூபா 1,097,050 தொகையான பொருட்கள் மற்றும் மூலதனமாக்கப்பட வேண்டிய ரூபா 252,350 ஆன உருப் படிகள் நிதிக்கூற்றுக்களில் செலவினமாக குறிப்பிடப்பட்டிருந்தன. | இறுதி இருப்பிற்கு உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. | இருப்பு மதிப்பீடு சரியாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் இருப்புக் கிரயம் இனங்காணப்பட வேண்டியதுடன் மூலதனச் சொத்துக்களாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தம்புள்ள பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிகாரசபையின் புதிய கட்டிடம் மற்றும் அதற்கு பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் 2018 செப்தெம்பர் 16 ஆந் தகிதி பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 66,661,502 ஆன அச் சொத்துக்களுக்குா மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு அளவு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த சீராக்கம் 2019 இன் இறுதி கணக்குகளில் மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு அளவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,450,372 தொகையான வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்வையானதன் பின்னர் கணக்கீடு செய்யப்படும் | ஆண்டிற்குரிய வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | எதிர்வரும் ஆண்டிற்குரிய ரூபா 369,662 தொகையான இயற்கை வளங்கள் ஆய்வு அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ஆண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 இன் இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,765,107 ஆன திருத்தச் செலவினம் வாகன கையேற்புச் செலவினமாக காண்பிக்கப்பட்ட கரணத்தினால் அப்பெறுமானத்தினால் சொத்துக்களின் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 1,807,248 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | 2019 இன் இறுதிக் கணக்குகள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான மற்றும் மூலதன செலவினங்கள் சரியாக இனங்கண்டு அதன் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் தவிர்த்தல் அதிகாரச்சட்டத்தின் (6)(ஈ) ஆம் | சட்டத்தின் பிரதான செயற்பாடுகளிலிருந்து விலகி சேரும் கழிவுப் பொருட்களை பரீட்சித்து உறுதிப்படுத்தாமல் கடலிற்கு விடப்பட்டிருந்த துடன் அபாயகரமான பொருட்களான சிகிச்சை கழிவுகள் நீண்ட குழாய் மூலம் கடலுக்குள் நேரடியாக வெளியேற்றப்பட்டிருந்தன. | உரிய நிறுவனங்களில் முறையாளன ஒத்துழைப்பு கிடைக்காததன் பேரில் உரிய இலக்குகளை அடைந்துகொள்வதில் தாமதமடைந்துள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்தி இந்நடவடிக்கைக ளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 2018 ஏப்ரல் 29 ஆந் திகதிய MFAR/AD/2/10/ 01/01/(28) ஆம் இலக்க ஒன்றிணைந்த அமைச்சரவைத் தீர்மானம் | (i) கரையோர வலயத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சகல நிறுவனங்கள் பிரதி நிதித்துவம் செய்யக்கூடிய வகையில் கரையோர வலயத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ குழுவொன்றை தாபித்தல். | எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்திலும் உள்ளூராட்சி மன்ற மட்டத்திலும் குழுக்களை தாபித்து நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii)டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் பேணிச் செல்லும் உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களின் உரிமையாளர்கள் என்பவற்றை சூழல் மாசடைதலாக இனங்கண்டு அவர்களுக்கு எதிராக தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் கடல்சார் சுற்றாடல் மாசடைதலைப் தவிர்த்தல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்க வில்லை. | தேசிய மாவட்ட மட்டத்திலும் உள்ளூராட்சி மன்ற மட்டங்களிலும் செயற்பட வேண்டிய முறை தொடர்பாக அறிவூட்டப்பட்டுள்ளது . | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 யூன் 06 ஆந் திகதிய அமப/18/0863/725/028 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | துறைமுகங்கள் உட்பட கடற்கரை வலயத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் செய்வது தொடர்பாக செயற்பாட்டு நடவடிக்கைகளை நிலைபேராக பராமரிப்பதற்காக பொருத்தமான நடவடிக்கையொன்று எடுக்க வேண்டுமென நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரின் அவதானிபபுக்களுக்கு கவனம் செலுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் உரிய கவனத்தை செலுத்தி அதன் பிரகாரம் மேற்படி நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்திலும் உள்ளூராட்சி மன்ற மட்டங்களிலும் குழுக்களை தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான நடவடிக்கையை நிறைவேற்றுவதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளை இடுவதற்குரிய நடவடிக்கை களை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 யூன் 28 ஆம் திகதிய 37/1816 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | முகத்துவராம் மற்றும் வெள்ளவத்த ஆகிய இடங்களிலிருந்து கழிவுப்பொருட்கள் கடலுக்குள் இடுவதற்குரிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட இரண்டாம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | இப்பிரதேசங்களில் மாசடைதல் அதிகளவில் காணப்படுவதால் அம் மாசடைதலை குறைப்பதற்கு நடவடிக்கை களை துரிதமாக எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கேவையின் II ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் பிரிவு | குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளில் விளைத்திறமை கான் தடைப் பரீட்சைகள் நடாத்தாமல் தொடர்ச்சியாக சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்தமை. | எதிர்காலத்தில் பரீட்சைகளில் சித்தியடைதல் அடிப்படையில் மாத்திரம் சம்பள ஏற்றங்கள் வழங்கல். | சம்பள ஏற்றங்கள் கொடுப்பனவின் போது குறித்துரைக்கப் பட்ட காலப் பகுதியில் குறித்த பரீட்சைகளை நடாத்த வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்த ரூபா 665,553 தொகையான 14 காசோலைகள் இந் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை. | நிதிப்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.** **நிதி மீளாய்வு**

**2.1** **நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 27,476,884 ஆன மிகை யொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 35,611,914 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 63,088,798 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 67,001,741 ஆல் அதிகரித்தமை இவ் அதிகரித்திப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3.** **செயற்பாட்டு மீளாய்வு**

**3.1** **இனங்காணப்பட்ட நட்டங்கள**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| Bhoomi Tech (PVT) Ltd இடமிருந்து 2017 சனவரி 31 ஆந் திகதி கிடைத்த ரூபா 5,800,000 பெறுமதியான Flame and Furnace Combined AAS ஆய்வு கூட உபகரணம் எலிகளால் சேதமாக்கப்பட்ட காரணத்தினால் மீண்டும் திருத்தி பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்ததுடன் இந்த உபகரணத்தை அதிகார சபையால் ஒரு தடவையாவது எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் பாதுகாப்பற்ற வகையில் பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள் குவித்து வைத்த காரத்தினால் பொது நிதியை முயைற்ற பாவனையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. | மீண்டும் உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முகாமைத்துவ பொறுப்பு கூற வேண்டியதுடன் சொத்துக்களை பாதுகாப்பது தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கடற்கரை முகாமைத்து நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் களனி கங்கை படுகையிலிருந்து மா ஓயா வரை பிளாஸ்ரிக் போத்தல் சேகரிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப் பட்டிருந்த போதிலும் அது வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | மீண்டும் கூறு விலை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |
| (ஆ) | மீன்பிடிக் கைத்தொழிலுடன் அண்மித்தாக இடம் பெறும் கடல்சார் சுற்றாடல் மாசடைதல் நடைமுறையை இனங்காண்பதன் மூலம் அதனை குறைப்பதற்காக தேசிய தந்திரோபாயங்களுடன் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் அதிகார சபையால் வரைவாக்கப்பட்டிருந்த போதிலும் அதன் தொடர் நடவடிக்கை மந்த கெதியில் இடம் பெற்றிருந்தது. | தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | துரிதமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் மூலம் மேவுகை செய்யப்படும் பிரதேசங்களுக்குரிய வலயங்களில் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதில் பலவீனம் காரமணாக கடலை சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவது குறைவடைந்திருந்தது. | அனுமதிப்பத்திரங்களை பரீட்சிக்கும் நடைமுறை செயற்பாடொன்றாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | துரிதமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஈ) | நீர்கொழும்பு அலுவலகத்தினுள் மடிக்கணனியொன்றும் 07 சுழமும் கதிரைகளும் உடைந்த பொருட்களாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் அப்பொருட்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | உடைந்த பொருட்களாக இனங்காணப்பட்டிருந்த சொத்துக்களை துரிதமாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் பிரதேச அலுவலகத்தின் மூலம் மேவுகை செய்வதற்கு உள்ள 320 கிலோ மீற்றர் கடல் பிரதேசத்தை இனங்காண்பதற்கு தேவையான ஜீபீஎஸ் உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளிலிருந்து ஜீபீஎஸ் இயந்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உப அலுவலகங்களுக்காக தேவையான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நாடு பூராகவும் கழிவு நீர் வெளியேற்றல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையில் காணப்படும் ஹொட்டெல்களின் எண்ணிக்கை 473 ஆக இருந்ததுடன் அதில் 257 ஹொட்டெல்கள் குறித்த அனுமதிப்பத்திரங்களை பெற்று கொண்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரங்களை பரீட்சிக்கும் நடைமுறையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த பரிசோதனைகளை துரிதமாக மேற் கொண்டு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பிராந்திய அலுவலகங்கள் மற்றும் குறித்த உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து கழிவுப் பொருட்கள் கடலுக்குள் வெளியேற்றப்படும் வடிகாண்கள் மற்றும் வாய்க்கால் முறைமை இணங்காணப்பட்டிருந்ததுடன் அந்த உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய எதிர்வரும் நடவடிக்கை எடுக்காமை காரணமாக அச்செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறுவனம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | குறித்த பரிசோதனைகளை துரிதமாக மேற் கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கழிவு நீர் வெளியேற்றுவதற்குரிய அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய 34 கைத்தொழில்கள் இணங்காணப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறுவன ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திற்குரிய அதிகார பிரதேசத்தில் கழிவுப் பொருள் வெளியேற்றுவதற்காக (டம்பிங்) அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய | எதிர்காலத்தில் நிறுவன ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சட்டப்பிரிவிற்கு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுப்பதை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாமல் நிறுவனம் தொடர்பாக அறிக்கை கோரப்பட்டு சட்டப்பிரிவின் மூலம் தேவையான எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஊ) | நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற நீரின் வெப்பம் அதிகமாக இருப்பதும் நிலக்கரி இறக்கும் போது கடலுக்குள் நிலக்கரி விழுவதன் காரணமாகவும் சுற்றாடல் மற்றும் கடல் மாசடைதல் இடம் பெறுகின்ற போதும் இதனை குறைப்பதற்கு நடவடிக்கைகளை அதிகார சபையால் எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறுவன ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் மற்றும் கடல் மாசடைதலை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | தங்காலை கஹந்த மோதர ஹெட்டெலில் இருந்து கழிவுப் பொருள் கடலுக்குள் வெளியேற்றுதல் மற்றும் வராஹேன பொது கழிவுப்பிரிவு முறைமை முறையாக செயற்படாமை காரணமாக ஏற்பட்டுள்ள சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக துரித நீர் வழங்குவது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறுவன ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் மற்றும் கடல் மாசடைதலை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீன்பிடி துறைமுகங்களில் காணப்படும் கழிவுப் பொருள் முகாமைத்துவதத்திற்காக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறுவன ரீதியில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் பிரதான பொறுப்பொன்றாக கருதி கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான நடைமுறை யொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கடல் எல்லையிலிருந்து 300 மீற்றர் தரை வரையான எல்லையில் கடலுக்குள் கழிவுப்பொருள் வெளியேற்றப்படும் வகையில் உள்ள மலசலகூடங்கள் மற்றும் கழிவுப்பொருட்கள் மீள்சுழற்சி செய்யப்படாமல் கடலுக்குள் விடுதல் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை அறிவூட்டுவதற்கும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமல் இடப்படும் கழிவுப்பொருட்கள் காரணமாக சுற்றுலா கைத்தொழிலுக்கு | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த அறிக்கையை துரிதமாக பெற்றுக்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

விசேடமாக தாக்கமளிக்க கூடியதாக இருப்பதால் அப்பிரச்சினை தொடர்பாக சுற்றுலா அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் செயற்படக்டிய வழி வகைகள் தொடர்பாக அறிக்கையொன்று தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுகக்ல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிலாபம் உப அலுவலகத்தில் இருந்த ரூபா 28,000 பெறுமதியான ஜீ.பீ.எஸ் (GPS) இயந்திரமொன்று காணாமல் போயிருந்ததுடன் அதற்காக எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புலனாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப பரிசோதனை மற்றும் முறையான பரிசோதனை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பயிற்சி திட்டமொன்று மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்படாதிருந்த இயலளவு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிற்காக ரூபா 1,017,045 தொகையை இலங்கை மன்றத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பயிற்சி தேவைப்பாடு எதிர்பார்க்கப்பட்ட செலவினம் மற்றும் வளவாளர் தெரிவு செய்து தொடர்பாக அரசிற்கு மிகவும் சாதகமான மற்றும் கிரயத்தை குறைத்துக் கொள்ளக்கூடிய வகையில் அதிகாரசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் குறைந்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. | நிறுவனத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | காலி அலுவலகத்திற்கு ரூபா 2,197,998 தொகை செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்ட ஆய்வுகூடத்தின் செயற்பாடுகளுக்காக பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் அந்த அலுவலகத்திற்கு இணைக்கப்படாமையால் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் போயிருந்தது. | சம தகமையுடைய கடல்சார் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார் | நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு சமுத்திர மாசடைதலை குறைந்த மட்டத்தில் பேணும் நோக்கிலும் பிரரந்திய அலுவலகங்களின் தரத்தை அதிகரித்து அலுவலகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் சமுத்திர சுற்றாடல் உத்தியோகத்தர் பதவி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தர்களை அந்த பிரதேச அலுவலகங்களுக்கு இணைப்பதில் பலவீனமான மட்டத்தில் காணப்படுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்து எதிர்காலத்தில் பிராந்திய அலுவலகங்களுக்கு இணைப்பு செய்யப்படும் | ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை் அந்த அலுவலகங்களுக்கு இணைப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 பெறுகை நடைமுறை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்குரிய பெறுகை திட்டமொன்று (Procument Plan) தயாரித்து அதற்குரியதாக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும் பின்னர் அதற்காக (Major Procument) ரூபா 41.166 மில்லியனும் (Minor Procument) ரூபா 3.285 மில்லியனாக ரூபா 44.451 மில்லியன்) திருத்திய பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் பாரியளவிலான 42 பெறுகைகள் மற்றும் 29 சிறு பெறுகைகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் திருத்திய பெறுகை திட்டத்திற்காக செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆரம்ப திட்டத்திற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் வரை அனைத்து பெரிய கொள்வனவுகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குறித்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் கீழ் 2018 செப்தெம்பர் 11 வரை கொள்வனவுகளின் செயன் முன்னேற்றத்தை சமர்ப்பிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அதிகார சபையால் தகவல் சமர்ப்பிக்கப்படாமையால் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை நிறைவேற்றியதை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | குறித்த பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களும் ஏற்கனவே ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குளை நிறைவேற்றிய முறை தொடர்பாக குறிப்பிடும் செயன்முன்னேற்றத்தை சமர்ப்பித்தல் வேண்டும் |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறைவேற்று முகாமைத்துவ மட்டத்தில் 05 பதவிகள் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடங்களாக இருந்ததுடன் அதில் இரண்டு உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | இது வரை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிரந்தர பதவியணியினர் வெற்றிடங்களை துரிதமாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக இரண்டு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. | அதிகார சபைக்குச் சொந்தமான 09 பிராந்திய அலுவலகங்கள் காணப்படுவதால் உள்ளக கணக்காய்வு பிரிவின் பதவியணியினர் அதிகரித்துக்கொள்ள வேண்டும். |

**4.2 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதும் அக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயற்படுத்துவதில் மந்தமான நிலைமையில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வுக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |

**4.3 சுற்றாடல் பிரச்சினைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருசபாடுவ பிரதேசத்தில் கடற்கரைக்கு அண்மித்த இடத்திற்கு சிலாபம் நகர சபையினால் முறையான நடைமுறையொன்றில்லாமல் முறையற்ற விதத்தில் கழிவுப்பொருட்கள் வெளியேற்றுதல் மற்றும் எரித்தல் காரணமாக கடொலான சுற்றால் முறைமைக்கும் உயிரியல் பல்வகை முறைமைக்கும் சேதம் ஏற்பட்டிருந்தன. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன். தேவையான அறிக்கை தயார்படுத்தப்பட்டு வருகின்றது. | கடலான சுற்றாடல் முறை மற்றும் உயிரியல் பல்வகை தன்மைக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தரை மற்றும் கடலை அண்மித்ததாக இடம்பெறும் வெவ்வேறு செயற்பாடுகள் காரமாக இடம் பெறும் சமுத்திர மாசடைதல் தொடர்பான சரியான தரவு முறைமையொன்று பேணிச் செல்வதன் மூலம் கடல் மாசடைதலை தவிர்ப்பதற்கான தீர்மானங்களை எடுத்தல் மற்றும் மாசடைதலை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் 2017 மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் BSWQI வகைப்படுத்தல் மூலம் காலாண்டு ரீதியில் குளிக்குமிடங்களின் நீரின் தரம் தரப்படுத்தப்பட்டிருந்தது. அதன் போது மிகவும் பலவீனமான சந்தர்ப்பம் 01 பலவீனமான சந்தர்ப்பங்களின் 06 உம் அவதானிக்கப்பட்டன. இதனிடையே கூடுதலாக கல்கிஸ்ஸ மற்றும் வெள்ளவத்த கடற்பரப்பில் நீரின் தரம் மற்றம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | சட்டரீதியான நடவடிக்கை எடுப்பது சிரமமாக காணப்படுகின்றது. | குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பலவீனமான சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அதற்குரிய செயற்பாடு எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாதம்பிட்டிய சுத்திகரிப்பு பம்பியறைக்கு வெளி நிறுவனங்களின் மலம் மற்றும் கழிவுப்பொருட்கள் எடுத்து வரும் பவுசர்களுக்கு இடையே பீஎச் பெறுமதி மாத்திரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூட பதவியணியினராக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தார். | கொழும்பு மாநகர சபையின் தேவையான ஒத்துழைப்பு கிடைக்காமையால் அது செயற்படுத்தப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் பலவீனமான சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஈ) | மீன் பிடி கைத்தொழிலுடன் அண்மித்தாக இடம் பெறும் கடல் மாசடைதலை முறைமையை இணங்காண்பதன் மூலம் அதனை | மீன்பிடி துறைமுகங்களில் கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | மீன்பிடி துறைமுகங்களில் கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | குறைப்பதற்காக தேசிய தந்திரோபாய மற்றும் செயலாற்றல் திட்டம் அதிகார சபையினால் வரைவாக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடி அதனை மிகவும் ஆக்கபூர்வமானதாக தயாரிப்பதற்காக கூட்டமொன்றை கூட்டுவதற்கும் 2018 யூன் 22 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதன் எதிர்வரும் படிமுறைகள் அவதானிக்கப்படவில்லை. | | |
| (உ) | தீவு முழுவதும் 25 மீன்பிடி துறைமுகங்கள் காணப்படுவதுடன் அதன் மூலம் பாரியளவில் கழிவுப் பொருட்கள் மற்றும் கழிவு நீர் கடலில் சேர்கின்றன. கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமை இல்லாமையால் மீன்பிடி சூழலில் படகு திருத்த வேலைகள் மற்றும் பூச்சு பூசுதல் நடவடிக்கைகளாலும் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களாலும் அதிகளவில் கடல் மாசடைவதற்கு உட்படுவதாக அவதானிக்கப்பட்டது. | அமைச்சு செயலாளரின் மூலம் தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாசடைதலை குறைப்பதற்கு துரிதமாக செயற்பட வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 05 நோக்கங்கள் இனங்காணப் பட்டுள்ளதுடன் அது ஐக்கிய நாடுகளின் கவனத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது மீளாய்வாண்டின் இறுதி வரை அதற்காக கிடைக்க வேண்டிய ஆலோசனைகள் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | தேவையான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அனைத்த அரச நிறுவனங்களின் செயற்பாடுகளும் கட்டாயமாக இருப்பதால் அதற்காக துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |